**பிப்ரவரி – 05**

# TNPSC துளிகள்


- நிதி தொழில்நுட்பத் தளங்களான மொபிக்விக் மற்றும் CRED ஆகியவை மத்திய வங்கியின் எண்ணிம நாணயத்தினை (CBDC) வழங்கச் செய்கின்ற முதலாவது வங்கி அல்லாத நிறுவனங்களாக உருவெடுத்து, தனது தளங்களில் பயனர்களுக்காக வேண்டி e-ரூபி எனும் பணக்கோப்பினை வெளியிட்டு உள்ளன.
- பொது விவகாரங்களில் ஆற்றியப் பங்களிப்புகளுக்காகவும் உலகளாவியத் தளத்தில் இந்தியாவின் கௌரவத்தை மேம்படுத்தியதற்காகவும் டிரினிடாட் மற்றும் டொபாகோவின் அதிபர் கிறிஸ்டின் கார்லா கங்கலூவுக்கு பிரவாசி பாரதிய சம்மான் விருது வழங்கப்பட்டு உள்ளது.
- சுமார் 48,000 சதுர கிலோமீட்டர் பசிபிக் பெருங்கடல் பரப்பினை உள்ளடக்கிய பகுதியினை மார்ஷல் தீவுகள் (மத்திய பசிபிக் பெருங்கடல் பகுதி) அதன் முதலாவது தேசியக் கடல் சரணாலயத்தினை அறிவித்துள்ளன.
- மத்திய ஜவுளித் துறை அமைச்சகமானது, கைத்தறி நெசவாளர்கள் E-Pehchaan இணைய தளத்தையும் மற்றும் கைத்தறி விருதுகளுக்கான ஒரு இயங்கலைத் தொகுதியை அறிமுகப்படுத்தி உள்ளது.
- தொழில்நுட்பக் குறைபாடுகள் குறித்த ஒரு மூலக் காரணப் பகுப்பாய்வு (RCA) அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்காக தொழில்நுட்பக் குறைபாடுகளுக்கான (iSPOT) ஒரு ஒருங்கிணைந்த SEBI இணைய தளம் என்ற இணையதளம் அடிப்படையிலான ஒரு தளத்தினை SEBI அமைப்பு அறிமுகப் படுத்தி உள்ளது.
- ஹைட்ரஜனைக் கொண்டு செல்வதற்காக வடிவமைக்கப்பட்டக் குழாய்களை உருவாக்கிய முதல் இந்திய நிறுவனமாக டாடா ஸ்டீல் நிறுவனம் மாறி உள்ளது என்ற ஒரு நிலைமையில் இந்தியாவின் மிக தூய்மையான எரிசக்தி முன்னெடுப்புகளில் மிகவும் முக்கியமான ஒரு படிநிலையைக் குறிக்கிறது.
- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சகத்தின் (MeitY) எண்ணிம இந்தியா பாஷினி பிரிவு (DIBD) உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட முதல் வடகிழக்கு மாநிலமாக திரிபுரா மாறியுள்ளது.
- ஜோஹோ கார்ப் நிறுவனத்தின் ஒரு இணை நிறுவனரான ஷைலேஷ் குமார் தேவே, அதன் புதிய குழுவின் தலைமை நிர்வாக அதிகாரியாக, ஸ்ரீதர் வேம்புவிற்குப் பதிலாக நியமிக்கப் பட்டுள்ளார்.
- இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியமானது இந்திய நாட்டின் 76வது குடியரசு தினத்தை முன்னிட்டு, " Dharohar - Milestones in the Indian securities market- தரோஹர் - இந்தியப் பத்திரச் சந்தையில் புதிய மைல்கற்கள்" என்ற ஒரு எண்ணிம அறிவுக் களஞ்சியத்தினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்திய மகளிர் கிரிக்கெட் அணியானது மலேசியாவில் (கோலாலம்பூர் நகரம்) நடைபெற்ற 19 வயதிற்கு உட்பட்டோருக்கான 2025 ஆம் ஆண்டு T20 உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் தென்னாப்பிரிக்க மகளிர் அணியை 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி இறுதிக் கோப்பையை வென்றது.
- இந்தியக் கடற்படையானது, போர்க்களச் செயல்பாட்டுத் தயார்நிலை பயிற்சி

(TROPEX-25) எனப்படுகின்ற மிகவும் பெரிய கடல்சார் பயிற்சியைச் சமீபத்தில் ஒரு கடற்படைத் தளமான கர்நாடகாவின் கார்வார் என்ற இடத்தில் நிறைவு செய்தன.

# தேசியச் செய்திகள்

## TEAM முன்னெடுப்பு

- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்கள் அமைச்சகமானது வர்த்தக செயல்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் (TEAM) என்ற முன்னெடுப்பினைத் தொடங்கி உள்ளது.
- இது "MSME உற்பத்தித் திறனை அதிகரித்தல் மற்றும் துரிதப்படுத்துதல் (RAMP)" என்ற திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டுள்ளது.
- இது MSME தொழில்துறைகளை எண்ணிம வர்த்தகத்தினை நன்கு ஏற்கவும், அவற்றின் சந்தை இருப்பை விரிவுபடுத்தவும் உதவும் நோக்கத்தைக் கொண்டுள்ளது.
- RAMP என்பது உலக வங்கியால் ஆதரிக்கப்படும் மத்திய அரசின் திட்டமாகும் என்ற நிலையில் இது 2022-23 முதல் 2026-27 ஆம் ஆண்டு வரையில் 5 ஆண்டுக் காலத்திற்கு அமல்படுத்தப் படுகிறது.




## பிரதான் மந்திரி தன்-தான்ய கிருஷி யோஜனா

- 2025 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், நாடு முழுவதும் உள்ள சுமார் 1.7 கோடி விவசாயிகளுக்கு மிகவும் நன்கு பயனளிக்கும் நோக்கில் பிரதான் மந்திரி தன்-தான்ய கிருஷி யோஜனா திட்டமானது தொடங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டம் ஆனது, வேளாண் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல், பயிர் பல்வகைப் படுத்தலை ஊக்குவித்தல், பஞ்சாயத்து மற்றும் தொகுதி மட்டங்களில் அறுவடைக்குப் பிந்தைய சேமிப்பை வலுப்படுத்துதல் ஆகியவற்றுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இது நீர்ப்பாசன உள்கட்டமைப்பினை மேம்படுத்துதல் மற்றும் விவசாயிகளுக்கு மிக குறுகிய மற்றும் நீண்ட கால கடன் கிடைக்கப் பெறும் நிலையினை அதிகரிக்கும்.

- கூடுதலாக, இந்தப் பிராந்தியத்தில் விவசாயிகளை ஆதரிப்பதற்காக பீகாரில் ஒரு மக்கானா (தாமரை விதை) வாரியமும் நிறுவப்பட்டுள்ளது.




## ஜல் ஜீவன் திட்டம் நீட்டிப்பு





- 2025-26 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், ஜல் ஜீவன் திட்டமானது 2028 ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்படுவதாகவும், அதற்கான மொத்த நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்

படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

- 2019 ஆம் ஆண்டு முதல், இந்தியாவின் கிராமப்புற மக்களில் 80 சதவீதத்தினை உள்ளடக்கிய 150 மில்லியன் குடும்பங்கள் குடிநீர் குழாய் இணைப்புகளைப் பெற்று உள்ளன.
- 100 சதவீத சேவை வழங்கீட்டினை அடைவதற்காக ஜல் ஜீவன் திட்டம் ஆனது 2028 ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- 2024-25 ஆம் ஆண்டிற்கான இத்திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீடு சுமார் 70,163 கோடி ரூபாய் ஆகும்.
- இந்த ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ஆனது 67,000 கோடி ரூபாயாக உள்ளது என்ற ஒரு நிலையில் இது கடந்த ஆண்டை விட 3,163 கோடி ரூபாய் குறைவாகும்.
- ஜல் ஜீவன் திட்டமானது, 2024 ஆம் ஆண்டிற்குள் ஒவ்வொரு கிராமப்புற வீட்டிற்கும் குடிநீர்க் குழாய் இணைப்பினை வழங்குவதை இலட்சிய இலக்காகக் கொண்டு 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தொடங்கப்பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## புர்கினா பாசோ, மாலி மற்றும் நைஜர் – ECOWAS




- மாலி, நைஜர் மற்றும் புர்கினா பாசோ ஆகியன மேற்கு ஆப்பிரிக்காவின் ஒரு முக்கிய அரசியல் மற்றும் வர்த்தகக் குழுவான மேற்கு ஆப்பிரிக்காவின் கூட்டணியிலிருந்து (ECOWAS) அதிகாரப் பூர்வமாக வெளியேறியுள்ளன.
- இந்த மூன்று நாடுகளும் ECOWAS கூட்டணியின் ஸ்தாபன உறுப்பினர்கள் ஆகும்.
- புர்கினா பாசோ, மாலி மற்றும் நைஜர் ஆகியவை தற்போது தங்கள் சொந்தக் கூட்டமைப்பான சஹேல் நாடுகளின் கூட்டணியை (AES) உருவாக்கியுள்ளன.
- இந்த மூன்று நாடுகளும் பிரான்சுடனான தங்கள் பாதுகாப்பு உறவுகளை பெருமளவில்

துண்டித்து, உதவிக்காக ரஷ்யா, ஈரான் மற்றும் துருக்கி ஆகியவற்றினை நாடியுள்ளன.

### மெக்சிகோ, கனடா மற்றும் சீனா மீதான அமெரிக்க வரிகள்

- அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், கனடா மற்றும் மெக்சிகோ ஆகியவற்றிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பல்வேறு பொருட்களுக்கு சுமார் 25 சதவீதமும் மற்றும் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு கூடுதலாக 10 சதவீதமும் வரிகள் விதித்துள்ளார்.
- 2023 ஆம் ஆண்டு நிலவரப்படி, கனடா மற்றும் மெக்சிகோவிலிருந்து அமெரிக்கா இறக்குமதி செய்தப் பொருட்களின் மதிப்பு சுமார் 900 பில்லியன் டாலர் ஆகும்.
- மெக்சிகோ மற்றும் கனடா ஆகியவை அமெரிக்க நாட்டின் வேளாண் இறக்குமதியில் குறிப்பிடத் தக்கப் பங்கைக் கொண்டுள்ளன.
- கனடா நாட்டுப் பொருட்களின் ஏற்றுமதியில் சுமார் 80% ஆனது, அமெரிக்காவிற்குச் ஏற்றுமதி செய்யப்படுகிறது என்பதோடு இதன் மதிப்பு சுமார் 410 பில்லியன் டாலர் ஆகும்.
- அமெரிக்காவிற்கான மெக்சிகோவின் ஏற்றுமதியானது உலக நாடுகளுக்கு விற்கப் பட்ட பொருட்களில் 84% ஆகும்.
- மெக்சிகோ ஆனது, 2023 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் காய்கறி இறக்குமதியில் 63 சதவீதமும் அமெரிக்க நாட்டின் பழங்கள் மற்றும் உலர் பழங்களின் இறக்குமதியில் சுமார் பாதிப் பங்கினையும் கொண்டுள்ளது.




## பொருளாதாரச் செய்திகள்

### புதிய MSME வகைப்பாடு 2025

- தற்போது அனைத்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்களின் (MSME) வகைப்பாட்டிற்கான முதலீடு மற்றும் வருவாய் வரம்புகள் முறையே 2.5 மற்றும் இரண்டு மடங்கு அதிகரிக்கப்படும்.
- குறு நிறுவனமாக வகைப்படுத்தப்படுவதற்கான முதலீட்டு வரம்பு 2.5 கோடி ரூபாயாக உயர்த்தப்பட உள்ளது.
- சிறு நிறுவனங்களுக்கான இந்த வரம்பு ஆனது 25 கோடி ரூபாயாகவும், நடுத்தர

நிறுவனங்களுக்கான வரம்பு 125 கோடி ரூபாயாகவும் உயர்த்தப்பட உள்ளது.

❖ இதே போல் இந்த வகைப்பாடுகளுக்கான வருவாய் வரம்பு குறு நிறுவனங்களுக்கு 10 கோடி ரூபாயாகவும், சிறு நிறுவனங்களுக்கு 100 கோடி ரூபாயாகவும், நடுத்தர நிறுவனங்களுக்கு 500 கோடி ரூபாயாகவும் உயர்த்தப்பட உள்ளது.

❖ தற்போது, 7.5 கோடி பணியாளர்களைப் பணிக்கு அமர்த்திய, நாட்டின் உற்பத்தியில் 36 சதவீதப் பங்கினைக் கொண்டுள்ள ஒரு கோடிக்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட MSME நிறுவனங்கள் உள்ளன.

**New classification of MSME**

| Type | INVESTMENT | | TURNOVER | |
|---|---|---|---|---|
| | Current | Revised | Current | Revised |
| MicroEnterprise | Rs 1cr | Rs 2.5cr | Rs 5cr | Rs 10cr |
| Small Enterprise | Rs 10cr | Rs 25cr | Rs 50cr | Rs 100cr |
| Medium Enterprise | Rs 50cr | Rs 125cr | Rs 250cr | Rs 500cr |

*Source: Budget 2025-2026, Speech of Nirmala Sitharama, Union Minister of Finance February 1, 2025.*

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## DeepSeek AI – சீனா

**IT TOOK ONLY $5.6MN TO CREATE**

- Founded in May 2023 by Liang Wenfeng, who also founded and runs a hedge fund called High-Flyer
- DeepSeek's headquarters is in the Chinese city of Hangzhou
- Paid access to its new model reportedly comes at 3% of what OpenAI charges
- The AI model sidetracks questions on itself and Chinese politics
- DeepSeek's first AI model – launched in Nov 2023 – was called DeepSeek Coder
- DeepSeek became #1 downloaded free app on Apple App Store, displacing ChatGPT which, though, has higher total downloads

❖ சமீபத்தில், டீப்சீக் நிறுவனமானது பகுத்தறிவு மாதிரிகள் எனப்படும் அதன் DeepSeek-V3 மற்றும் DeepSeek-R1 செயற்கை நுண்ணறிவு மாதிரிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

❖ இந்த மாதிரிகள் விரைவாக, ChatGPT செயலியினை விஞ்சி, ஆப் ஸ்டோரில் அதிகம்

பதிவிறக்கம் செய்யப்பட்ட செயலியாக மாறியுள்ளது.

- OpenAI மற்றும் கூகுள் நிறுவனங்களின் வரம்பிற்குட்பட்ட சில செயற்கை நுண்ணறிவு மாதிரிகளைப் போலல்லாமல் DeepSeek மாதிரிகள் ஆனது ஒரு பொதுப் பயன்பாட்டுத் தளமாகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## எகிப்தில் புள்ளிகள் கொண்ட கழுதைப்புலி

- எகிப்திய ஆராய்ச்சியாளர்கள் சுமார் 5,000 ஆண்டுகளுக்குப் பிறகு, தெற்கு எகிப்தில் ஒரு புள்ளிகள் கொண்ட கழுதைப்புலி (குரோகுட்டா குரோகுட்டா) காணப்படுவதாகக் கண்டறிந்துள்ளனர்.
- புள்ளிகள் கொண்ட கழுதைப் புலிகள் 5,000 ஆண்டுகளுக்கு முன்பு எகிப்தில் அழிந்து விட்டன.
- வரிகள் கொண்ட கழுதைப் புலிகள் மற்றும் நிலஓநாய் (பூச்சியுண்ணும் கழுதைப் புலி) ஆகிய இரண்டு கழுதைப் புலி இனங்கள் எகிப்தில் காணப்படுகின்றன.
- இந்த காலக் கட்டத்தில் காட்டுப்பன்றிகள் மற்றும் வரிக்குதிரைகள் எகிப்தில் மறைந்து விட்டன.




# மாநிலச் செய்திகள்

## சாக்லேட் போர் - ஜார்க்கண்ட் காவல்துறை

- ஜார்க்கண்ட் மாநிலக் காவல்துறையானது, மாநிலத்தின் கிராமப்புற மக்களிடையே ஓபியம் சாகுபடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறதா என்பதை மிகவும் நன்கு சோதிப்பதற்காக வேண்டி ஒரு தனித்துவமான முன்னெடுப்பினை மேற்கொண்டு அதற்கு "சாக்லேட் போர்" என்று பெயரிட்டுள்ளது.
- இந்த முன்னெடுப்பின் கீழ், காவல்துறையினர் வாராந்திர கிராமச் சந்தைகளுக்குச் சென்று, ஓபியம் சாகுபடியின் சட்டரீதியான விளைவுகள் பற்றிய தகவல்கள் அடங்கிய உறைகளில் சுற்றப்பட்ட சாக்லேட்டுகளை விநியோகிக்கின்றனர்.
- மிகவும் குறிப்பிடத்தக்க வகையில், அந்த மாநிலத்தின் குந்தி மாவட்டம் ஆனது இந்த நடவடிக்கைகளால் மிக அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் ஒன்றாகும் என்ற ஒரு

நிலையில் அந்தப் பகுதியில் ஓபியம் 'முக்கியப் பயிராக' மாறியுள்ளது.

- குந்தியின் அர்கி, சாய்கோ, முர்ஹு மற்றும் மரங்காடா அரஸ் ஆகிய சில இடங்களில் பெரிய அளவில் ஓபியம் சாகுபடி செய்யப்படுகிறது.
- குந்தியைத் தவிர, ராஞ்சி, ஹசாரிபாக், லதேஹர், பலாமு மற்றும் சத்ரா ஆகிய சில மாவட்டங்களும் "ஓபியம் கடத்தலுக்கான" ஏற்ற இடங்களாக மாறியுள்ளன.




# விளையாட்டு செய்திகள்

## மாற்றுத் திறனாளிகளுக்கான 23வது தேசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டி 2025





- 23வது மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டிக்கான (2025) அதிகாரப்பூர்வ முத்திரைச் சின்னம் மற்றும் உருவச்சின்னம் ஆகியவை சென்னையில் வெளியிடப் பட்டன.
- இந்த சாம்பியன்ஷிப் போட்டியில் நாடு முழுவதிலுமிருந்து சுமார் 1,700க்கும் மேற்பட்ட மாற்றுத் திறனாளி தடகள வீரர்கள் பங்கேற்க உள்ளனர்.

- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (SDAT) ஆனது, தமிழ்நாடு மாற்றுத் திறனாளி விளையாட்டுப் போட்டிகள் சங்கத்துடன் இணைந்து இப்போட்டிகளுக்கான ஆதரவினை அளிக்கிறது.

# முக்கிய தினங்கள்

## இந்தியக் கடலோரக் காவல்படை தினம் - பிப்ரவரி 01

- இந்தியக் கடலோரக் காவல்படை (ICG) ஆனது, பிப்ரவரி 01 ஆம் தேதியன்று அதன் 49வது ஸ்தாபனத் தினத்தைக் கொண்டாடியது.
- 1978 ஆம் ஆண்டு கடலோரக் காவல்படை சட்டத்தின் விளைவாக, இந்தப் படையானது 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18 ஆம் தேதியன்று உருவாக்கப்பட்டது.
- இந்தியாவின் கடல் சார்ந்த எல்லைகளை நன்குப் பாதுகாத்தல், தேடல் மற்றும் மீட்புப் பணிகள் மற்றும் கடத்தல்காரர்கள் மற்றும் இந்தியப் பெருங்கடலில் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுப்பது ஆகியவை இந்தப் படையின் நோக்கங்களில் அடங்கும்.
- கடல் மாசுபாடு, கழிவுப் பொருட்களைக் கடலில் கொட்டுதல், எண்ணெய்க் கசிவுகள் போன்றவற்றைக் குறைக்கச் செய்வதற்கான பல்வேறு நடவடிக்கைகளையும் இந்தப் படை மேற்கொள்கிறது.





## உலக சமய நல்லிணக்க வாரம் 2025

- இது ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி மாதத்தின் முதல் வாரத்தில் அனுசரிக்கப்படும் ஒரு வருடாந்திர கொண்டாட்டமாகும்.
- இது உலகளவில் பல்வேறு மதச் சமூகங்களிடையே அமைதி மற்றும் பெரும் புரிதலை ஊக்குவிப்பதற்கான ஒரு தளமாகச் செயல்படுகிறது.
- 2010 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையால் இந்த வாரக் கொண்டாட்டம் நிறுவப் பட்டது.

- இந்த ஒரு வாரக் கொண்டாட்டமானது, பல்வேறு சமய நம்பிக்கைகளுக்கு இடையே பேச்சுவார்த்தை, மரியாதை மற்றும் ஒத்துழைப்பை அதிகரிப்பதில் பெரும் கவனம் செலுத்துகிறது.
- இது குடிமக்களை நல்லிணக்க உணர்வை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு சிந்திக்கவும் நடவடிக்கை எடுக்கவும் ஊக்குவிக்கிறது.




## உலகப் புற்றுநோய் தினம் - பிப்ரவரி 04




- இந்த உலகளாவிய முன்னெடுப்பு ஆனது, புற்றுநோய் தடுப்பு, கண்டறிதல் மற்றும் சிகிச்சை பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலகளவில், 2020 ஆம் ஆண்டில் பதிவான சுமார் ஒரு கோடிக்கும் அதிகமான உயிரிழப்புகளுடன் உயிரிழப்புகளுக்கான முக்கியக் காரணமாக புற்றுநோய் உள்ளது.
- இந்தியாவில், 2022 ஆம் ஆண்டில் சுமார் 19 முதல் 20 லட்சம் (மதிப்பிடப்பட்டது)

பாதிப்புகள் பதிவாகியுள்ளன.

- 2025-2027 ஆம் ஆண்டுகளுக்கான உலகப் புற்றுநோய் தினத்திற்கான கருத்துரு, ''United by Unique' என்பதாகும்.

# இதரச் செய்திகள்

## எட்டிகொப்பகா பொம்மைகள்

- ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் அணி வகுப்புக் காட்சி வாகனமானது எட்டிகொப்பகா பொம்மைகள் எனப்படும் பண்டைய மர பொம்மைகள் உருவாக்கக் கலையினைச் சித்தரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டது.
- இது சுற்றுச்சூழலுக்கு உகந்தப் படைப்பாற்றல் மற்றும் கலாச்சாரப் பாரம்பரியத்திற்கு ஒத்ததாக மாறியுள்ள 400 ஆண்டுகள் பழமையான கைவினைப் பொருளாகும்.
- தென்கிழக்கு ஆந்திரப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு மிகவும் சிறிய கிராமமான எட்டிகொப்பகாவில், கைவினைஞர்கள் இந்தப் பொம்மை தயாரிக்கும் மிகப்பெரும் பாரம்பரியத்தை குறையின்றி முழுமை பெறச் செய்துள்ளனர்.
- மிகப்பெரும்பாலும் புராணக் கதைகள் அல்லது விலங்குகளைச் சித்தரிக்கும் இந்தப் பொம்மைகள், அவற்றின் குறையற்ற வளைவுகள், சிறப்பான நிறச் சாயல்கள் மற்றும் நுட்பமான வடிவமைப்பிற்காக / விவரங்களுக்காக நீண்ட காலமாகத் தனித்துப் புகழ் பெற்றுள்ளன.




## ரோடமைன் B

- ரோடமைன் B என்பது அதன் மிகப் பிரகாசமான இளஞ்சிவப்பு நிறத்திற்குப் பெயர் பெற்ற ஒரு செயற்கை சாயமாகும் என்பதோடு இது ஜவுளி, காகிதம் மற்றும் தோல் போன்ற தொழில் துறைகளில் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது.
- அதன் ஒளிரும் பண்புகள் காரணமாக அதன் பயன்பாடு அறிவியல் ஆராய்ச்சி வரை உள்ளது.
- இருப்பினும், நுகர்வுப் பொருட்களில் இதன் பயன்பாடானது சுகாதார அபாயங்களைக் கொண்டுள்ளது.
- ரோடமைன் B ஆனது டிஎன்ஏ சேதத்தை ஏற்படுத்தி, பிறழ்வுகளுக்கு வழி வகுப்பதோடு, புற்றுநோய் வளர்ச்சியைத் தூண்டும் என்று ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

- இதன் மீதான விலங்கு ஆராய்ச்சியானது, நீண்ட காலமாக சாயத்தின் பயன்பாட்டிற்கு உள்ளானதால் தொடர்ந்து கல்லீரல் மற்றும் சிறுநீர்ப்பை போன்ற சில உறுப்புகளில் கட்டிகள் ஏற்படுவதாகக் குறிப்பிட்டுள்ளது.
- 1990 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் அழகுசாதனப் பொருட்களில் இந்த ரோடமைன் சாயத்தின் பயன்பாட்டினை தடை செய்த முதல் நாடுகளில் ஐரோப்பிய ஒன்றியமும் ஒன்றாகும் என்பதோடு அமெரிக்காவில் உணவு மற்றும் மருந்து நிர்வாகம் (FDA) ஆனது இது மனித நுகர்வுக்குப் பாதுகாப்பற்றது என்று வகைப்படுத்தி, உணவுப் பொருட்களில் இதைப் பயன்படுத்துவதை நீண்ட காலமாகத் தடை செய்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், தமிழ்நாடு அரசானது பஞ்சு மிட்டாய் உற்பத்தி மற்றும் விற்பனையைத் தடை செய்தது.
- கர்நாடக மாநில அரசு, 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், பிரபலமானத் தெருவோர உணவு விற்பனைக் கடைகளில் ரோடமைன் B பயன்படுத்துவதைத் தடை செய்தது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★